டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்... எண்ணிய முடிதல் வேண்டும்...

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER
★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 150 | 24.11.2025 | MONDAY | KARTHIGAI : 7 | PRICE : RS.5/-
மலர் : 01 | இதழ் : 150 | 24.11.2025 | திங்கள்கிழமை | கார்த்திகை : 7 | விலை : ரூ.5/-

3 தூத்துக்குடி, தென்காசி, நெல்லை, குமரியில் கனமழை எச்சரிக்கை: முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுறுத்தல்

4 ஐநா பாதுகாப்பு கவுன்சில் சீர்திருத்தம் ஒரு கட்டாய தேவை: பிரதமர் மோடி

2 சிதம்பரம்: போலீசை தாக்கிய பிரபல கஞ்சா வியாபாரி துப்பாக்கியால் சுட்டுப்பிடிப்பு

# கல்வி வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது: பள்ளி கல்வித்துறை

சென்னை: நவ.24-

முதல்வர் ஸ்டாலினின் ஆட்சியின் பள்ளிக் கல்வித்துறையில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் குறித்த பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பள்ளிக்கல்வித்துறை வெளியிட்ட அறிக்கையில், 'தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றது முதல் பள்ளிக் கல்வித்துறையில் எண்ணற்ற பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு நான்கரை ஆண்டுகளில் தமிழ்நாடு கல்வி வளர்ச்சியில் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. அதன் விவரம் ஒரு பார்வை.

இல்லம் தேடிக் கல்வித்திட்டம்: திராவிட மாடல் அரசின் பள்ளிக் கல்வித் துறையில் கரோனா காலக் கற்றல் இடைவெளியைக் குறைத்திட 19.10.2021 அன்று "இல்லம் தேடிக் கல்வி" திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு 202122 முதல் 2024ஞூ25 ஆம் கல்வியாண்டு வரை ரூ,660.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 1.65 லட்சம் தன்னார்வலர்கள் மூலம் 95.97 லட்சம் மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். 2024ஞூ2025 ஆம் ஆண்டில் 50,000 இல்லம் தேடிக் கல்வி மையங்கள் 1 முதல் 5 ஆம் வகுப்பு மாணவர்கள் பயன்பெறும் வரையில் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் 7.97 லட்சம் மாணவர்கள் பயன் பெறுகின்றனர்.

வாசிப்பு இயக்கம்: அன்றாடம் வாசிப்புப் பழக்கத்தை குழந்தைகளிடம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக வாசிப்பு இயக்கம் ஒரு முன்னோடித் திட்டமாக 11 மாவட்டங்களில் 11 ஒன்றியங்களில் தொடங்கப்பட்டு, 914 அரசு பள்ளிகளில் 4 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரையுள்ள 66,618 மாணவர்கள் பயனடைந்தனர்.

எண்ணும் எழுத்தும் திட்டம்: 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளிடையே அடிப்படைக் கல்வியறிவு மற்றும் எண்ணறிவை மேம்படுத்தவும், ஒவ்வொரு குழந்தையும் 2025 ஆம் ஆண்டுக்குள் வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை எண்கணிதத் திறன்கள் அடைவதை உறுதி செய்யவும், "எண்ணும் எழுத்தும்" திட்டம் தொடங்கப்பட்டது.

உள்ளடக்கிய கல்வி: அரசுப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களைச் சிறப்புப் பயிற்றுநர்கள் மூலம் அடையாளம் காணவும், அதன் அடிப்படையில் தக்க சிறப்புக் கல்வி வழங்கவும், "நலம் நாடி செயலி" வடிவமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

38 மாதிரிப் பள்ளிகள்: ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பள்ளி வீதம் மொத்தம் 38 மாதிரிப் பள்ளிகள் ரூ.352.42 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாதிரிப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களில் பலர் பல்வேறு முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்றுள்ளனர்.

28 தகைசால் பள்ளிகள்: மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் கற்றல் எல்லைகளை விரிவுபடுத்த இப்பள்ளிகள் தளமாக விளங்குகின்றன. 28 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒரு பள்ளி வீதம், 28 பள்ளிகள் தகைசால் பள்ளிகளாக ரூ.100.82 கோடி செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

கலைத் திருவிழா: குழந்தைகளிடம் மறைந்திருக்கும் கலை உணர்வுகளை வெளிக்கொணரும் நோக்கில் பள்ளிகளில் கலைத் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. 20222023 ஆம் ஆண்டில் போட்டிகள் நடத்தப்பட்டு, 2024ஞூ25 ஆம் கல்வியாண்டு முதல் இத்திட்டம்




1 முதல் 5 ஆம் வகுப்பு மாணவ மாணவியர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள்: பள்ளிகளில் ஆய்வகங்கள் மூலம் மாணவர்களின் ஆய்வுத் திறன்கள் மேம்படுத்தப்படுகின்றன. அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.519.73 கோடி மதிப்பீட்டில் 8,209 உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் (Hi-Tech Lab) அமைக்கப்பட்டுள்ளன.

திறன்மிகு வகுப்பறைகள்: அரசுப் பள்ளிகளில் பயிலும் 16,77,043 மாணவர்கள் பயனடையும் வகையில் ரூ.455.32 கோடி செலவில் 22,931 திறன்மிகு வகுப்பறைகள் (Smart Class-room) அமைக்கப்பட்டுள்ளன.

தொழிற்கல்வி பாடத்திட்டம் மறுசீரமைப்பு: 202122 ஆம் கல்வியாண்டு முதல் 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புக்கான சீரமைக்கப்பட்ட தொழிற்கல்வி பாடத்திட்டம் மற்றும் பாடப் புத்தகங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு 60,000 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு வருகின்றது. மேலும் தொழிற்கல்வி மாணவர்களுக்கான துறை சார் அகப்பயிற்சி (In-ternship) ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு அகப்பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது.

ஆசிரியர்களுக்குக் கைக்கணினிகள்: 79,723 இடைநிலை ஆசிரியர்களுக்கு ரூ.81 கோடி செலவில் கைக்கணினிகள் (Tablet) வழங்கப்பட்டுள்ளன.

பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்: பள்ளிகளில் கட்டமைப்புகளை மேம்படுத்திட உருவாக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின்கீழ் 2022 23 மற்றும் 202324ஆம் கல்வியாண்டுகளில் 614 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.1087.76 கோடியும், 2,455 ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.800 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2,455 ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும், 391 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

வானவில் மன்றம்: அரசுப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடையே அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (ஷிஜிணிவி) ஆகியவற்றில் ஆர்வத்தையும் திறனையும் தூண்டும் வகையில் நடமாடும் அறிவியல் ஆய்வகத் திட்டம் (வானவில் மன்றம்) ரூ.11.69 கோடி செலவில் 33.50 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பேராசிரியர் அன்பழகன் விருது: கற்றல், கற்பித்தல், ஆசிரியர் திறன் மேம்பாடு, தலைமைத்துவம், மாணவர் வளர்ச்சி எனப் பன்முக வளர்ச்சியினை வெளிப்படுத்தும் சிறந்த பள்ளிகளுக்கு பேராசிரியர் அன்பழகன் பெயரில் விருது வழங்கும் திட்டம் 2023 24 ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது: அரசின் திட்டங்கள் அனைத்தையும் சிறப்பாகச் செயல்படுத்தும் 100 தலைமை ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயத்துடன் வழங்கப்படுகிறது.

தமிழ்ப் புதல்வன் திட்டம்: இத்திட்டத்தின்கீழ் 6 முதல் 12 வகுப்பு வரை அரசுப் பள்ளிகளிலும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ் வழியிலும் பயின்ற மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ.1,000 உதவித் தொகை வழங்கப்படுகிறது. 2024 2025 ஆம் கல்வியாண்டில் 3.28 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்: மாநகராட்சி, நகராட்சி, ஊரக மற்றும் மலைப் பகுதிகள் அனைத்திலும் செயல்படும் அனைத்து அரசுத் தொடக்கப் பள்ளிகளிலும், அரசு உதவிபெறும் தொடக்கப்பள்ளிகளிலும் பயிலும் மாணவ / மாணவியருக்கு காலை உணவு வழங்கும் ஒரு முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2024ஞூ25 ஆம் கல்வியாண்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள அரசு உ

கல்வித் தொலைக்காட்சி: 1 முதல் 12ஆம் வகுப்பு வரை அனைத்துப் பாடங்களையும் காணொலிகளாக உருவாக்கி கல்வித் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பு செய்து வருகிறது. மெய்ந்நிகர் ஒளிப்பதிவுக்கூடம்: நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, காணொலிகள் தயாரிப்பதற்காக, மெய்ந்நிகர் ஒளிப்பதிவுக்கூடம் உள்ளிட்ட 5 உயர்தொழில்நுட்பப் படப்பதிவுக்கூடங்கள் மற்றும் ஒரு ஒலிப்பதிவுக்கூடம் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இக்காணொலிகள் மூலம் 58,721 பள்ளிகளில் உள்ள 1,23,73,598 மாணவர்களும் 5,32,909 ஆசிரியர்களும் பயன்பெறுவர்.

97 வட்டாரக் கல்வி அலுவலர்கள் முதுகலை ஆசிரியர்கள் நியமனம்: 2021ஞூ22 ஆம் ஆண்டில் 97 வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடங்களுக்கு இணைய வழியாகத் தேர்வுகள் நடத்தப்பட்டு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன. 2023ஞூ24 ஆம் ஆண்டில் 33 வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடங்களுக்கான தேர்வுகள் நடத்தப்பட்டு, பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை 1 / கணினி பயிற்றுநர் நிலை 1 ஆகிய பணியிடங்களுக்குக் கணினி வழியாக போட்டித்தேர்வு நடத்தப்பட்டு, 3,043 முதுகலை ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுப் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இளைஞர் இலக்கிய விழா: 20232024 ஆம் ஆண்டு முதல் இலக்கியத் திருவிழாக்களுடன் கூடுதலாக இளைஞர் இலக்கிய விழா ஆண்டுதோறும் ரூ.30 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு வருகிறது.

சிறந்த கற்போர் மையங்களுக்கு விருதுகள்: வயது வந்தோர் கல்வித் திட்டச் செயல்பாடுகளைச் சிறப்பாகச் செயல்படுத்திய 228 சிறந்த கற்போர் மையங்களுக்கு பாராட்டுச் சான்றிதழ், கேடயம் மற்றும் பதக்கங்களை உள்ளடக்கிய மாநில எழுத்தறிவு விருது 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டது.

புதிய எழுத்தறிவுத் திட்டம்: 15 வயதுக்குமேற்பட்ட முற்றிலும் எழுதப் படிக்கத் தெரியாத நபர்களுக்கு அடிப்படை எழுத்தறிவுக் கல்வியை வழங்கும் பொருட்டு 2022ஞூ23 ஆம் ஆண்டு முதல் புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.9.83 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி 15 இலட்சம் கற்போர் தங்களின் அடிப்படை எழுத்தறிவைப் பெற்று பயனடைந்துள்ளனர்.

சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்: மத்திய மற்றும் மாவட்ட சிறைச்சாலைகளில், எழுதப்படிக்கத் தெரியாத சிறைவாசிகளுக்கு, அடிப்படை எழுத்தறிவுக் கல்வி வழங்கிடும் வகையில் ரூ.25 இலட்சம் செலவில், சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2023 24 மற்றும் 2024ஞூ25 ஆம் ஆண்டுகளில் முறையே 1,249 மற்றும் 1,398 எழுதப்படிக்கத் தெரியாத சிறைவாசிகள் பயனடைந்துள்ளனர்.

இவ்வாறாக, முதல்வர் ஸ்டாலின் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் நான்கரை ஆண்டுகளில் பள்ளிக் கல்வித்துறையில் புதுமையான பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறை இந்திய அளவில் சிறப்பான பல சாதனைகளைப் படைத்துப் பெருமைக்குரிய துறையாக உயர்ந்து சிறந்து விளங்குகிறது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளம்பரம் மற்றும் செய்திகள் தொடர்புக்கு : 88705 00000

அழையுங்கள்! வாசகர்களே!!

தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)
(24 x 7)

88705 00000
sakkraviyugam2025@gmail.com

# அலங்காநல்லூரில் அதிமுக சார்பில் பூத் கமிட்டி பாக பொறுப்பாளர்கள் பயிற்சி முகாம்

அலங்காநல்லூர். நவ.24.

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் தெப்பக்குளம் பகுதியில் அமைந்துள்ள சமுதாயக் கூடத்தில் அதிமுக சார்பில் பூத் கமிட்டி மற்றும் பாக பொறுப்பாளர்கள் பயிற்சி முகாம் ஒன்றிய செயலாளர் கல்லணை ரவிச்சந்திரன், தலைமையிலும் நகர செயலாளர் அழகுராஜ், முன்னிலையிலும் சட்டமன்ற எதிர்க்கட்சி துணை தலைவர் ஆ.பி.உதயகுமார் கலந்து கொண்டு பேசினார் அவர் பேசியது 2026 நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் சோழவந்தான் தொகுதியில் அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டும் அதற்கு நீங்கள் அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும் என கூறினார்.அதனைத் தொடர்ந்து நலத்திட்ட உதவிகளை





வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர்கள் வக்கீல் திருப்பதி, வெற்றிவேல், வாடிப்பட்டி ராஜேஷ்கண்ணா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்

தமிழரசன், கருப்பையா, மாணிக்கம், மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணை செயலாளர் ஜெயச்சந்திரமணியன், ஒன்றிய துணைச் செயலாளர் சம்பத், அண்ணா தொழிற்சங்க ஒன்றிய செயலாளர் சுந்தர், வார்டு செயலாளர்கள்

சுந்தரராகவன், பாஸ்கரன், நகர இணை செயலாளர் புலியம்மாள் துணைச் செயலாளர் லதா, அம்மா பேரவை மாவட்ட துணைச் செயலாளர் மனோகரன், மாவட்ட மகளிரணி இணைச் செயலாளர் மருதாயிசுந்தர், நகர பிரதிநிதி முரளி,ஒன்றிய நிர்வாகி பாண்டுரங்கன், விவசாய அணி ஆர்.பி.குமார், முத்துகிருஷ்ணன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரேவதி மற்றும் வலசை சுப்பிரமணி உள்பட கலந்து கொண்டனர்.

# ‘திமுக ஆட்சி சமூகநீதியின் இருண்ட காலம்’ பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்காததற்கு அன்புமணி கண்டனம்

சென்னை, நவ.24-

“தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் காலாவதியாகி இன்றுடன் ஒரு வாரம் ஆகும் நிலையில், அந்த ஆணையத்தை அமைக்க திமுக அரசு நடவடிக்கை எடுக்காதது கண்டிக்கத்தக்கது. திமுக ஆட்சி சமூகநீதியின் இருண்ட காலம்“ என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் காலாவதியாகி இன்றுடன் ஒரு வாரம் ஆகும் நிலையில், இன்று வரை புதிய ஆணையத்தை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி வன்னியர் இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து பரிந்துரைத்தல், சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்துதல் உள்ளிட்ட ஏராளமான பணிகள் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு காத்துக் கிடக்கும் நிலையில், அந்த ஆணையத்தை அமைக்க திமுக அரசு நடவடிக்கை எடுக்காதது கண்டிக்கத்தக்கது.

சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசர் வீ.பாரதிதாசன் தலைமையில் கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் 17ஆம் தேதி தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் திருத்தி அமைக்கப்பட்டது. ஆணையத்தின் 3 ஆண்டு பதவிக்காலம் கடந்த 16ஆம் தேதியுடன் நிறைவடைந்து விட்டது. அதன்பின் நவம்பர் 17ஆம் தேதியிலிருந்து புதிய ஆணையம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தை அமைக்காமல் திமுக அரசு தாமதம் செய்வதை அனுமதிக்க முடியாது.

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் ஆகியோரின் நலன்களைக் காப்பதில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பங்கு மிகவும் முக்கியமானது. தமிழ்நாட்டில் 1990ஆம் ஆண்டுகளுக்கு முன்பாக சட்டநாதன் தலைமையிலும், அம்பாசங்கர் தலைமையிலும் இரு ஆணையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அதன்பின் 1990ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு இதுவரை 15 ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இரு வகையான ஆணையங்களும் ஒரே மாதிரியான நோக்கம் கொண்டவை என்றாலும் கூட, அவை இரண்டும் அமைக்கப்பட்ட முறைகள் முற்றிலும் வேறுபட்டவையாகும்.

முதலில் அமைக்கப்பட்ட இரு ஆணையங்களும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு சமூகநீதி வழங்க வேண்டும் என்ற தேவைக்காக அமைக்கப்பட்டவையாகும். அவற்றின் பணி முடிந்தவுடன் அந்த ஆணையங்கள் காலாவதியாகிவிடும். அவற்றுக்கு உறுதி செய்யப்பட்ட பதவிக்காலம் கிடையாது.

ஆனால், 1990களுக்குப் பிறகு அமைக்கப்பட்ட ஆணையங்களுக்கு உறுதி செய்யப்பட்ட பதவிக்காலங்கள் உண்டு. அந்த ஆணையங்கள் 1992ஆம் ஆண்டு இந்திரா சகானி வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் அமைக்கப்பட்டவை ஆகும். இந்த



ஆணையங்கள் நிரந்தர ஆணையங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அதனால், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் ஒரு வாரத்திற்கும் மேலாக காலியாக இருப்பதை ஏற்க முடியாது.

தமிழ்நாட்டில் சமூகநீதியைக் காக்கும் பெரும் பொறுப்பு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு உண்டு. கடந்த 2022ஆம் ஆண்டு நீதியரசர் பாரதிதாசன் தலைமையில் அமைக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு பிற்படுத் தப்பட்ட வகுப்பினர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் புதிய சாதிகளை சேர்த்தல் அல்லது நீக்குதல், இந்த பட்டியல்களை மாற்றியமைத்தல், சமூக, கல்வி பின்தங்கிய நிலையின் அடிப்படையில் இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரின் இட ஒதுக்கீட்டை மேம்படுத்துதல், இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவுகள் மற்றும் உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்களின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினரின் உள் ஒதுக்கீடு குறித்து பரிந்துரைத்தல், அதற்கு தேவையான பொருத்தமான, நிகழ்கால தரவுகளைத் திரட்டுவதற்காக சுதந்திரமான கணக்கெடுப்புகளை மேற்கொள்ளுதல், தமிழக அரசால் அவ்வப்போது வழங்கப்படும் சமூகநீதி சார்ந்த பணிகளை செய்தல் ஆகியவை தான் தமிழக அரசு வழங்கிய பணிகள் ஆகும். அவற்றில் ஒன்றைக்கூட, கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் நிறைவேற்றவில்லை.

அந்த வகையில் பார்த்தால், திமுக ஆட்சியும், அண்மையில் காலாவதியான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் மூன்றாண்டு பதவிக்காலமும் சமூகநீதியின் இருண்டகாலமாகவே பார்க்கப்படுகின்றன. அதுமட்டுமின்றி, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் வன்னியர்களுக்கு உள் இடஒதுக்கீடு வழங்குவது குறித்து 3 மாதங்களுக்குள் பரிந்துரைக்குபடி தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு 2023ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் தேதி அரசு ஆணையிட்டது.

அதன்பின் ஆணையத்தின் பதவிக்காலம் கடந்த 16ஆம் தேதி நிறைவடையும் வரை 1040 நாள்களாகிவிட்ட போதிலும் ஆணையம் ஆக்கப்பூர்வமாக எதையும் செய்யவில்லை. அந்த வகையில் பதவிக்காலம் முடிவடைந்த ஆணையம் பயனற்ற ஆணையம் தான்.

ஆனாலும், சமூகநீதிக்கான அமைப்புகள் இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும். அப்போது தான் சமூகநீதி உயிர் வாழும். கடந்த ஆணையத்தின் சமூகநீதி செயல்பாடுகள் முடங்கிக் கிடந்ததற்கு காரணம் அதன் தலைவரும், உறுப்பினர்களும் மட்டும் அல்ல... தமிழக அரசும் தான். வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கிவிடக்கூடாது என்பதில் திமுக அரசு உறுதியாக இருந்தது.

அதனால் தான் வன்னியர் இட ஒதுக்கீட்டுக்கு எதிராக பல முட்டுக்கட்டைகள் போடப்பட்டன. ஆனால், அதையும் தாண்டி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அதன் சமூகநீதிக் கடமையை நிறைவேற்றியிருக்க வேண்டும் என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் எதிர்பார்ப்பு ஆகும். எனினும், ஏமாற்றம் தான் பரிசாகக் கிடைத்தது.

சமூகநீதியை வென்றெடுப்பது தொடர்ச்சியான போராட்டம் ஆகும். எத்தனை ஏமாற்றங்கள் கிடைத்தாலும், நிச்சயமாக சமூகநீதிக்கு வெற்றி கிடைக்கும் என்பது எங்களின் அசைக்க முடியாத நம்பிக்கை ஆகும். ஆனால், அதையும் சிதைக்கும் வகையில் புதிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தை அமைக்காமல் இருப்பதன் மூலமாக வன்னியர்களுக்கு எதிரான சமூகநீதியை படுகொலை செய்ய எந்த எல்லைக்கும் செல்வோம் என்பதை திமுக அரசு நிரூபித்துள்ளது. திமுகவின் இந்த துரோகத்தை மன்னிக்க முடியாது.

உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்குவது உள்ளிட்ட ஏராளமான சமூகநீதிக் கடமைகளை நிறைவேற்ற தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் கட்டாயத் தேவை ஆகும். இதை உணர்ந்து தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தை திமுக அரசு உடனடியாக அமைக்க வேண்டும். அதன் தலைவர் மற்றும் உறுப்பினர்களாக சமூகநீதியில் அக்கறை கொண்ட, சமரசம் செய்யும் குணம் இல்லாதவர்களை தமிழ்நாடு அரசு நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்’ எனத் தெரிவித்துள்ளார்.



# சிதம்பரம் : போலீசை தாக்கிய பிரபல கஞ்சா வியாபாரி துப்பாக்கியால் சுட்டுப்பிடிப்பு

கடலூர், நவ.24-

சிதம்பரம் அருகே உள்ள அண்ணாமலை நகர் பகுதியில் போலீசாரை தாக்கிய கஞ்சா வியாபாரி துப்பாக்கியால் சுட்டுபிடிக்கப்பட்டார்.

கடலூர் மாவட்டம் சிதம்பரம் அண்ணாமலை நகர் போலீசார் நேற்று வல்லம்படுகையை சேர்ந்த மோகன் மகன் நவீன் (25), கோவிந்தசாமி நகரைச் சேர்ந்த ராஜா மகன் கவுதம் (25), வல்லத்துரை பகுதியைச் சேர்ந்த முருகன் மகன் அருள் என்கிற ஜெயக்குமார் (30) ஆகிய மூன்று பேரையும் உசுப்பூர் ரயில்வே கேட் பகுதியில் ஒரு பையில் ஒரு கிலோ 100 கிராம் கஞ்சாவுடன் பிடித்தனர். அப்பொழுது நவீன் கத்தியை காட்டி தப்பி ஓடிவிட்டார். மற்ற இருவரும் கைது செய்யப்பட்டனர். ஒரு கிலோ 100 கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

இந்த நிலையில், நேற்று இரவு நவீன் கைது செய்யப்பட்டார். இன்று (நவ.23) காலை 6 மணி அளவில் போலீசார் நவீனை அழைத்துக் கொண்டு அவர் மறைத்து வைத்த கஞ்சா மற்றும் ஆயுதங்களை பறிமுதல் செய்ய மாரியப்பா நகர் முட்புதர் பகுதிக்கு அழைத்து சென்றனர். அப்பொழுது அவர் காவலர் ஐயப்பனை மறைத்து வைத்திருந்த மற்றொரு கத்தியால் வெட்டி உள்ளார். இதனைத் தொடர்ந்து காவல் ஆய்வாளர் அம்பேத்கர் துப்பாக்கியால் நவீனை வலது கால் முட்டியில் சுட்டு பிடித்தார்.

சுட்டுப் பிடிக்கப்பட்ட நவீன் அண்ணாமலை நகரில் உள்ள கடலூர் மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சேர்க்கப்பட்டார். நவீனால் இடது கையில் வெட்டப்பட்ட காவலர் ஐயப்பனும் அதே மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். இதுகுறித்து தகவல் அறிந்த கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார் துப்பாக்கி சூடு நடைபெற்ற பகுதியை பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் காவலர் ஐயப்பனை சந்தித்து ஆறுதல் கூறினார்.

பின்னர் செய்தியாளரிடம் கூறிய மாவட்ட கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார், “கடலூர் மாவட்டத்தில் கஞ்சா கடத்தல் மற்றும் கஞ்சா விற்பனையில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். கடலூர் மாவட்டத்தில் இதுவரை கஞ்சா வழக்கில் 332 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 208 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

துப்பாக்கியால் சுட்டுபிடிக்கப்பட்ட நவீன் அண்ணாமலை நகர் காவல் காவல் நிலையத்தில் சுமார் 20 கிலோ கஞ்சா வழக்கில் தொடர்புடைய தலைமறைவு குற்றவாளி. நவீன் மீது அண்ணாமலை நகர், மயிலாடுதுறை மாவட்டம் ஆனைக்காரன் சத்திரம், சீர்காழி ஆகிய காவல் நிலையங்களில் கஞ்சா வழக்கு உள்ளது” என தெரிவித்தார்.

# சேலம் அருகே 56 அடி உயர முருகன் கோயில் கும்பாபிஷேகம்

சேலம், நவ.24-

சேலம் மாவட்டம், தாரமங்கலம் அருகே அணைமேடு ராஜமுருகன் கோயிலில், 56 அடி உயர முருகன் சிலை அமைக்கப்பட்டது. இந்நிலையில் பிரமாண்டமாக கட்டப்பட்ட அந்த முருகன் சிலையின் முக அமைப்பு, முனியப்பன், அய்யனாரப்பன் ஆகிய கடவுள்களின் உருவத்தை ஒத்திருந்தது. முருகன் என்றாலே அழகு என்று பொருள்படுவதாக கூறி, பிரமாண்ட சிலை குறித்து சர்ச்சை எழுந்தது.

சுற்று வட்டார பகுதி மட்டும் அல்லாமல் சிலை குறித்து தகவல் தெரிந்த பலதரப்பட்ட மக்கள் சமூகவலைதளங்களில் தங்கள் கருத்துக்களை பதிவிட்டனர். பலர் எதிர்மறை கருத்துக்களால் விமர்சனம் செய்தனர். இதையடுத்து கோயில் நிர்வாகம் சார்பில் முகம் மறு வடிவமைப்பு செய்யப்பட்டு இன்று கும்பாபிஷேகம் நடந்தது. இதில் தாரமங்கலம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

# அதிமுக ஒன்றிணைந்தால் தான் வெற்றிபெற முடியும் என்பது மக்களின் கருத்து: ஓபிஎஸ்

திண்டுக்கல், நவ.24–

அதிமுக ஒன்றிணைந்தால் தான் வருகின்ற தேர்தலில் வெற்றிபெறமுடியும் என்பது மக்களின் கருத்தாக உள்ளது என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

தேனியில் இருந்து சென்னை செல்ல திண்டுக்கல் ரயில் நிலையத்திற்கு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வந்தார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: “தவெக கூட்டம் உள் அரங்கில் நடந்தியது குறித்து அந்த கட்சி தலைவரிடம் தான் கேட்கவேண்டும். அதிமுக ஒன்றிணைந்தால் தான் வெற்றிபெறமுடியும் என்பது தமிழக மக்களுடைய கருத்தாக உள்ளது” என்றார். தவெக கூட்டத்தில் பேசிய விஜய் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் குறித்த கேள்விக்கு, அவரது கனவு நனவாகட்டும் என்றார். மேலும், “எஸ்ஐஆர் படிவம் பூர்த்தி செய்து கொடுப்பதில் பிரச்சனை இல்லை. இதில் விடுபட்டாலும் மேலும் ஒருவாய்ப்பாக புதிய வாக்காளர்களை சேர்க்க வாய்ப்புள்ளது. படிவங்கள் பூர்த்தி செய்வதில் சில கடினங்கள் உள்ளன. அதை எளிதாக்கவேண்டும். எஸ்ஐஆர் படிவம் பூர்த்தி செய்து கொடுக்க கால அவகாசத்தை நீட்டிக்கவேண்டும்” என்றார். பிஹாரில் எஸ்ஐஆர் தான் வெற்றிக்கு காரணம் என திண்டுக்கல் சீனிவாசன் கூறியது குறித்து கேட்டதற்கு, “சீனிவாசன் அண்ணன் உண்மைதான் பேசுவார், உண்மையை தவிர எதுவும் பேசமாட்டார். பத்திரிகையாளர்கள் பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாக்குவது தவிர்க்கப்படவேண்டும். பத்திரிகையாளர்களுக்கு உரிய மரியாதை தரப்படவேண்டும்” என்றார். மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணியில் சேர்வது குறித்து கேட்டதற்கு, “அரசியலில் எதுவும் நடக்கலாம். எங்கள் கொள்கையின்படி வாய்ப்பு தரவேண்டும். அண்ணாமலை, தினகரன் சந்திப்புக்கு வாழ்த்துக்கள். அனைவரும் ஒன்றிணைய வாய்ப்பு அதிகம். எனது ஆதரவாளர்கள் விலகுவது என்னை எந்தவிதத்திலும் பாதிக்காது. நாம் பிறக்கும்போது எந்த பதவியோடு பிறந்தோம் இழப்பதற்கு” என்றார்.

# சண்டிகரின் நிர்வாக அமைப்பை மாற்ற மத்திய அரசு திட்டமா? உள்துறை அமைச்சகம் மறுப்பு

புதுடெல்லி, நவ.24-

சண்டிகரை அரசியலமைப்பின் 240வது பிரிவின் கீழ் கொண்டு வருவதற்கான அரசியலமைப்பு திருத்த மசோதாவை அறிமுகப்படுத்தும் திட்டம் மத்திய அரசுக்கு இல்லை என்று மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதே நேரத்தில், சண்டிகர் யூனியன் பிரதேசத் துக்கான மத்திய அரசின் சட்டம் இயற்றும் செயல்முறையை எளிமைப்படுத்தும் திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளதாகவும் அது கூறியுள்ளது.

இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “சண்டிகரை அரசியலமைப்பின் 240வது பிரிவின் கீழ் கொண்டு வருவதற்கான அரசியலமைப்பு திருத்த மசோதா விவகாரத்தில் எந்த இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை. இந்த திட்டம் எந்த வகையிலும் சண்டிகரின் ஆட்சி அல்லது நிர்வாக அமைப்பை மாற்ற



முயலவில்லை. மேலும், சண்டிகருக்கும் பஞ்சாப் மற்றும் ஹரியானாவுக்கு இடையிலான பாரம்பரிய ஏற்பாடுகளை மாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை.

சண்டிகரின் நலன்களைக் கருத்தில் கொண்டு அனைத்து பங்குதாரர்களுடனும் போதுமான ஆலோசனைகளை மேற்கொண்டு அதன் பிறகே, பொருத்தமான முடிவு எடுக்கப்படும். இந்த விவகாரத்தில் எந்த கவலையும் தேவையில்லை. வரவிருக்கும் நாடாளுமன்றக் குளிர்காலக் கூட்டத்தொடரில் இதுபோன்ற எந்தவொரு மசோதாவையும் அறிமுகப்படுத்த மத்திய அரசு விரும்பவில்லை” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சண்டிகர் யூனியன் பிரதேசம், பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களின் தலைநகராக உள்ளது. பஞ்சாப் ஆளுநர், இதன் நிர்வாகியாக உள்ளார். இந்நிலையில், சண்டிகர் யூனியன் பிரதேசத்துக்கு தனி துணை நிலை ஆளுநரை நியமிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதற்கு வழிவகை செய்யும் வகையில் சண்டிகர் யூனியன் பிரதேசத்தை அரசியலமைப்பின் 240வது பிரிவின் கீழ் கொண்டு வருவதற்கான அரசியலமைப்பு திருத்த மசோதாவை வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவர அரசு திட்டமிட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகின. பிரிவு 240ன் கீழ், அந்தமான் நிகோபார் தீவுகள், லட்சத்தீவுகள், தாத்ரா நாகர் ஹவேலி, டாமன் டையூ ஆகிய சட்டமன்றங்கள் இல்லாத யூனியன் பிரதேசங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# “விஜய் ஒரு சின்ன குழந்தை; அவர் பேசுவதை பொருட்படுத்தக்கூடாது” ஜெகத்ரட்சகன்

புதுச்சேரி, நவ.24–

‘விஜய் ஒரு சின்னக் குழந்தை, அவருக்கு சட்டம் தெரியவில்லை, அவர் சினிமாவில் பேசுவதுபோல் பேசுகிறார், அவர் பேசுவதை பொருட்படுத்தக்கூடாது’ என திமுக எம்.பி. ஜெகத்ரட்சகன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் நான்காம் கட்ட திமுக உறுப்பினர் சேர்க்கை முகாம் இன்று தொடங்கியது. புதுச்சேரியில் உள்ள 30 தொகுதிகளில் 17 தொகுதிகளில் திமுக உறுப்பினர் சேர்க்கை மூன்று கட்டங்களாக தொடங்கப்பட்டது.

நான்காம் கட்டமாக இன்று மண்ணடிப்பட்டு தொகுதியில் உள்ள திருக்கனூர் கடைவீதியில் திமுக உறுப்பினர் சேர்க்கை தொடங்கப்பட்டது.

மாநில அமைப்பாளர் இரா. சிவா முன்னிலையில் நடைபெற்ற முகாமில், தி.மு.க கொள்கைப் பரப்புச் செயலாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி., கலந்து கொண்டு, வீடு, வீடாக சென்று



திமுக உறுப்பினர் படிவம் கொடுத்து உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைத்தார்.

அதைத்தொடர்ந்து ஜெகத்ரட்சகன் எம்பி செய்தியாளர்களிடம் கூறியதாவது, “தமிழகத்தை போல புதுச்சேரியையும் சிறந்த மாநிலமாக மாற்ற மக்கள் விரும்புகிறார்கள். தற்போது 21 தொகுதிகளில் தீவிர சேர்க்கை படிவத்தை தந்து உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைத்துள்ளோம். இந்த மாதத்துக்குள் இதர தொகுதிகளிலும் பணிகளை நிறைவேற்றுவோம்” என்றார்.

திட்டங்களுக்கு அனுமதி தராமல் மத்திய அரசு தமிழகத்தை புறக்கணிக்கிறதா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், “வடநாடு, தென்நாடு என பிரிக்கிறார்கள். வெள்ளையனை வெளியேற்ற பாடுபட்டோம். தொடர்ந்து புறக்கணிக்கப்படுகிறோம். புதுச்சேரியை ஆள அருகதை இங்குள்ளோருக்கு இல்லை. டெல்லியில் இருந்துதான ஆட்சி செய்கிறார்கள்.

புதுச்சேரியில் என்ன அதிகாரமுள்ளது. முதல்வர், எம்எல்ஏக்களுக்கு அதிகாரமில்லை. அப்படிப்பட்ட ஜனநாயகமே தேவையில்லை. மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சியே எங்கள் தத்துவம். மக்கள் உணர்வு எங்களுக்குதான் தெரியும். வடநாட்டில் இருந்தோரை ஆட்சி செய்ய வைப்பது என்ன ஜனநாயகம்? புதுச்சேரியை புதுச்சேரியில் உள்ளோர் தான் ஆள வேண்டும் என்பதை திமுக முன்வைக்கிறது” என்றார்.

திமுகவுக்கு கொள்கை கிடையாது கொள்ளையடிக்கதான் தெரியும் என விஜய் பேசியிருக்கிறாரே என்ற கேள்விக்கு, “பாவம் விஜய் ஒரு சின்ன குழந்தை. அவர் சொல்வதை பொருட்டாக எடுத்துக்கொள்ளக்கூடாது. சினிமாவில் பேசுவதுபோல் பேசுகிறார்” என தெரிவித்தார்.

நீட் தேர்வை ரத்து செய்வோம் என்று கூறிய திமுக, ஆட்சிக்கு வந்தபிறகு அதற்காக எதுவும் செய்யவில்லை என விஜய் சொல்கிறாரே என்ற கேள்விக்கு, “விஜய்க்கு சட்டம் தெரியவில்லை. இந்த விவகாரம் மத்திய அரசின் கையில் உள்ளது. நீதிமன்றம் சென்றுள்ளோம். வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. நீட் தேர்வை ரத்து செய்வது திமுகவுக்கு உயிர்மூச்சான கொள்கை. அதில் இருந்து ஒரு விழுக்காடுகூட பின்வாங்காமல் செயல்படுகிறோம்“ என தெரிவித்தார்.

# சின்னாளபட்டியில் எஸ்.ஐ.ஆர். தீவிர வாக்காளர் சேர்க்கை திருத்த பட்டியல் பணிகள் தீவிரம் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் ராஜா ஆய்வு

## பேரூராட்சி அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் திவேற்றம் செய்யும் பணிகளை பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார்

சின்னாளபட்டி, நவ.24-

சின்னாளபட்டியில் எஸ்.ஐ.ஆர். தீவிர வாக்காளர் சேர்க்கை திருத்த பட்டியல் பணிகள் மந்தமாக நடைபெற்று வந்தது. மாவட்ட ஆட்சியர் செ.சரவணன் அதிரடி உத்தரவால் சின்னாள பட்டியில் எஸ்.ஐ.ஆர். தீவிர வாக்காளர் சேர்க்கை திருத்த பட்டியல் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் ராஜா அவர்கள் சின்னாளபட்டி பேரூராட்சி அலுவலகத்தில் ஆய்வு வாக்காளர் பட்டியல் பதிவேற்றம் செய்யும் பணிகளை பார்வையிட்டு ஆலோசனைவழங்கினார்



திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டியில் சுமார் 40ஆயிரம் பேர் வசிக்கின்றனர். 26ஆயிரம் வாக்காளர்கள் உள்ளனர். சின்னாளபட்டியில் உள்ள 18 வார்டுகளில் 26 வாக்குசாவடி மையங்கள் உள்ளன. சின்னாளபட்டியில் எஸ்.ஐ.ஆர். தீவிர வாக்காளர் சேர்க்கை திருத்த பட்டியல் பணிகள் மந்தமாக நடைபெற்று வந்தது. குறிப்பாக ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அகரம், தாடிக்கொம்பு, ஸ்ரீராமபுரம், கன்னிவாடி, சித்தையன்கோட்டை, ஆகிய பேரூராட்சிகளில் 70சதவீதத்திற்கு மேல் வாக்காளர் சேர்க்கை நடைபெற்று வந்த நிலையில் சின்னாளபட்டியில் மட்டும் வாக்காளர் சேர்க்கை இருந்தது. மாவட்ட ஆட்சியரின் அதிரடி உத்தரவால் சின்னாளபட்டி மற்றும் தருமத்துப்பட்டிக்கு ஆதிதிராவிடர் நலத்துறை தாசில்தார், கிருஷ்ணமூர்த்தி கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டார் .இதுபோல திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள ஏழு சட்டமன்ற தொகுதிகளுக்கும் கண்காணிப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

மாவட்ட ஆட்சியர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் உத்தரவுபடி பேரூராட்சி பணியாளர்கள் செயல் அலுவலர் இளவரசி தலைமையில் தீவிரமாக எஸ்.ஐ.ஆர். தீவிர வாக்காளர் சேர்க்கை திருத்த பட்டியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதிரடியாக பேரூராட்சிகளின் உதவிய ராஜா அவர்கள் சிறப்பு முகாம் நடைபெறும்இடங்களுக்கு சென்று பார்வை யிட்ட பின்பு பேரூராட்சி அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் பதிவேற்றம் செய்யும் பணிகளை பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார் தாமதம் இல்லாமல் விண்ணப்ப படிவங்களைவிரைவாக பதிவேற்றம் செய்வது எப்படி என்பது குறித்து ஆலோசனை வழங்கினார் அதன் பின்னர் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்றும் பாராமல் பாராமல்தங்களுக்கு ஒதுக்கப்பட்ட அரசு பணியை கடமை உணர்வுடன் செய்வதை பார்த்து பணியாளர்களை வாழ்த்தியதோடு இன்னும் அதிகமாக விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்து விரிவாக முடிக்க வேண்டும் என்றார்.

சின்னாளப்பட்டியில் உள்ள 26 வாக்காளர்களில் தற்போது பத்தாயிரம் வாக்காளர்கள் பட்டியலில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது ஆய்வின் போது செயல் அலுவலர் இளவரசி துப்புரவு அலுவலர் மணிகண்டன் துப்புரவு மேற்பார்வையாளர்கள் அகிலன், சரளா அலுவலக பணியாளர்கள் ராமமூர்த்தி, கலைச்செல்வி, வரி வசூலர்கள் தங்கத்துரை, சசிகுமார் ஆகியோர் உடன் இருந்தனர்



■ தென்காசி மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே கமல் கிஷோர், தென்காசி சட்டமன்றத் தொகுதி, குற்றாலம் பகுதியில் உள்ள பள்ளியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2025 சிறப்பு முகாமில் பெறப்பட்ட மனுக்கள் பதிவேற்றும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



■ மதுரை மாவட்டம், கிழக்கு வட்டம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ரூ.5.50 கோடி மதிப்பீட்டில், இராஜாக்கூர் திட்டப்பகுதி அணுகுசாலை பணியின் பூமி பூஜையில், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டு பணிகளை துவக்கி வைத்தார். மேலூர் வருவாய் கோட்டாட்சியர் சங்கீதா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய நிர்வாக பொறியாளர் கதிரேசன், உதவி நிர்வாக பொறியாளர் ஈஸ்வரி, உதவி பொறியாளர் பிரவீனாதேவி ஆகியோர் உடன் உள்ளனர்.



# திசையன்விளை SIR பணிகளை அதிமுக அமைப்பு செயலாளர் வக்கீல் ஏ.கே.சீனிவாசன் ஆய்வு

திசையன்விளை, நவ.24-

திசையன்விளை பேரூராட்சிக்கு உட்பட்ட வாக்குச்சாவடிகளில் நடைபெற்று வரும் வாக்காளர்கள் பட்டியல் தீவிர திருத்தப் பணிகளை திசையன்விளை உலக மீட்பர் மேல்நிலைப்பள்ளி மற்றும் ராமகிருஷ்ணா மேல்நிலைப்பள்ளி முகாம்களில் அதிமுக அமைப்பு செயலாளர் வக்கீல் ஏ.கே.சீனிவாசன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் திசையன் விளை பேரூர் கழக செயலாளர் வி.பி.ஜெயக் குமார், இராதாபுரம் கிழக்கு ஒன்றிய கழக அவைத் தலைவர் ஏ.எம்.கண்ணன், மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் தர்மசீலன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு இணைச் செயலாளர் பிரதீஷ்குமார், அதிமுக பாக முகவர்கள் பிரேம்குமார், கவுன்சிலர் மற்றும் மாவட்ட இளைஞரணி இணை செயலாளர் ஷி.முத்துக் குமார், மாவட்ட மாணவரணி இணைச் செயலாளர் கியூபர்ட் சாமுவேல், மாவட்ட இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை துணைச் செயலாளர் முத்துகுமார், மாவட்ட மாணவரணி துணை செயலாளர் அப்புவிளை அஸ்வின் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# எஸ்ஐஆர் செயல்முறை குறித்து நவ. 24 முதல் தமிழகத்தில் தேர்தல் ஆணைய அதிகாரிகள் கள ஆய்வு

சென்னை, நவ.24-

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த செயல்முறை குறித்து நாளை முதல் (நவ. 24) முதல் தமிழ்நாட்டில் இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் கள ஆய்வு மேற்கொள்ள இருப்பதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ள அறிக்கை: 2026 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு முழுவதும் சிறப்பு தீவிர திருத்த செயல்பாடுகளை மதிப்பாய்வு செய்ய இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் தமிழகத்திற்கு வருகை தர உள்ளனர்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் ஊடகப் பிரிவைச் சேர்ந்த பி. பவன், துணை இயக்குநர் தேவன்ஷ் திவாரி ஆகியோர் நவம்பர் 24 முதல் 26 வரை சென்னையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் கட்டம்மிமி குறித்த ஊடக ஒருங்கிணைப்பு மற்றும் வாக்காளர் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்வார்கள். அதைத் தொடர்ந்து, அவர்கள் கள அளவி லான ஆய்வு களை மேற்கொள் வார்கள். கூடுதலாக, இந்திய தேர்தல் ஆணை யத்தின் இயக்குனர் கிருஷ்ணகுமார் திவாரி, இச்சிறப்பு தீவிர திருத்த செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்து, குறிப்பாக மாவட்ட அளவில் சம்பந்தப்பட்ட வாக்கு சாவடி நிலை அலுவலர்கள் மூலம் கணக்கீட்டு படிவங்கள் விநியோகம் மற்றும் அதன் டிஜிட்டல் முறை உள்ளீடு குறித்து மதிப்பாய்வு செய்வதற்காக கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களுக்கு வருகை தருவார். இதேபோல், செயலர் மதுசூதன் குப்தா சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களுக்குச் சென்று சிறப்பு தீவிர திருத்தம் பற்றி ஆய்வு செய்வார். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

திருச்சி, நவ.24-

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அமைந்துள்ள மதுபான சில்லறை விற்பனை கடைகளில் விற்பனை செய்யப்படும் மதுபாட்டில்களை விளைநிலங்கள், பொது இடங்கள் மற்றும் சாலைகளில் காலியாக விட்டுச்செல்வதை தடுக்கும் பொருட்டு வாடிக்கையாளர்கள் வாங்கி சென்று அருந்தியபின் காலி மதுபான பாட்டில்களை அதே சில்லறை விற்பனை கடைகளில் திரும்ப பெற்றுக் கொள்ளும் திட்டம் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற ஆணையின்படி 25.11.2025 முதல் அமலுக்கு வருகிறது.

இந்த நடைமுறை ஏற்கனவே 19.01.2024 முதல் திருவாரூர், நாகப்பட்டினம். தேனி. கன்னியாகுமரி, தர்மபுரி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நடைமுறையில் மதுபான சில்லறை விற்பனை கடைகளில் விற்பனை செய்யப்படும் மதுபான பாட்டில்களை அடையாளம் காணும் வகையில் மதுபாட்டில்கள் மீது கடை எண். குறிப்பிட்டு ரூ.10/ என அச்சிடப்பட்ட ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருக்கும்.

அனைத்து மதுபான சில்லறை விற்பனை கடைகளில் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு மதுபாட்டில்களையும் விற்பனை செய்யும் போது அதிகபட்ச சில்லறை விற்பனை விலையுடன் சேர்த்து கூடுதலாக ரூ.10/ வாடிக்கையாளரிடம் இருந்து பெறப்படும். அவ்வாறு வாடிக்கையாளர்கள் மதுபான கடைகளிலிருந்து வாங்கும் மதுபாட்டில்களை அதில் ஒட்டப்பட்டிருக்கும் ஸ்டிக்கரோடு அதே மதுபான கடையில் காலியாக திரும்ப ஒப்படைக்கும் போது ஏற்கனவே பெறப்பட்ட ரூ.10/ திரும்ப வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வே.சரவணன்,இ.ஆ.ப..அவர்கள் தெரிவித்துள்ளார்.

# திருப்பூர் அவிநாசியில் கஞ்சா விற்பனை செய்த நபர் கைது

திருப்பூர், நவ.24-

அவிநாசியில் விற்பனைக்காக கஞ்சா எடுத்துச் சென்ற நபர் கைது. திருப்பூர் மாவட்டம் அவினாசி காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட பகுதியில் சட்ட விரோதமாக கஞ்சா விற்பனை. நடப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 22.11.2025. ஆம் தேதி மதுவிலக்கு காவல்துறையினர் கிருஷ்ணா பேக்கரி அருகில் சோதனையில் சட்ட விரோதமாக விற்பனைக்காக கஞ்சா கொண்டு வந்த சுபத்குமார் யாதவ் த.பெ.ராம் கணேஷ் ராய் என்பவர் அவிநாசி கனியாம் பூண்டியில் டெய்லர் வேலை செய்து வருவதாகவும். லாபத்துக்காக கஞ்சா விற்பனை செய்துள்ளார். அதனையடுத்து அவிநாசி மதுவிலக்கு காவல்துறையினர் எதிரியை கைது செய்து. விற்பனைக்காக எடுத்து வந்த.5. கிலோ கிராம் எடையுள்ள கஞ்சாவை கைப்பற்றி மேற்படி நபரின் வழக்கு பதிவு செய்து. நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.



# மாநில அளவிலான சிலம்பாட்ட போட்டி 900 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்பு

திருச்சி, நவ.24-

திருச்சி மாவட்டம், உறையூரில் முத்தமிழ் சிலம்பம் டிரஸ்ட் சார்பில், மாநில அளவிலான சிலம்பாட்ட போட்டி காலை தொடங்கி மாலை வரை நடைபெற்றது. இப்போட்டியில் 16 மாவட்டங்களில் இருந்து 900 திற்கும் மேற்பட்ட சிலம்பாட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். மதியம் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றவர்களை குற்றவியல் வழக்கறிஞர் சங்க செயலாளர் பி.வி. வெங்கட், இணைச் செயலாளர் ப.விஜய் நாகராஜன் ஆகியோர் பரிசுகளை வழங்கினர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிலம்பாட்ட கழகத்தை சேர்ந்த சரவணன் மற்றும் நாகவேல் நிர்வாகிகள் செய்திருந்தனர்.



■ டிசம்பர்03 உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களுக்கு நடைபெற்ற ஓவியப்போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே இ.ஆ.ப. அவர்கள் பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சரவணக்குமார் அவர்கள் உள்ளார்.

# தூத்துக்குடி, தென்காசி, நெல்லை, குமரியில் கனமழை எச்சரிக்கை: முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுறுத்தல்

சென்னை, நவ.24-

தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் நிலவும் மேலடுக்கு காற்று சுழற்சி காரணமாக தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி, கன்னி யாகுமரி ஆகிய இடங்களில் இன்று மிக கனமழை பெய்யக் கூடும் எனவே அனைத்து முன்னெச்ச ரிக்கை நடவடிக்கை களையும் மேற்கொள்ளுமாறு மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தெற்கு இலங்கைக்கு அருகிலுள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவும் மேலடுக்கு காற்று சுழற்சி காரணமாக இன்றும் தமிழ்நாடு முழுவதும் பரவலாக மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் இன்று மிககனமழை பெய்யக்கூடும் என இந்தியா வானிலை மையம் எச்சரித்துள்ளது.

கடலூர், அரியலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை, விருதுநகர், ராமநாதபுரம், மற்றும் அதை ஒட்டிய பகுதிகளில் மிதமானது முதல் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

மிககனமழை மற்றும் கனமழை எச்சரிக்கை அளிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ் நாடு அரசு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தொடர்புடைய மாவட்ட ஆட்சி யர்களை அறிவுறுத்தியுள்ளது.

மேலும், தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையின் இரண்டு அணியினர் தூத்துக்குடி மாவட்டத்திலும், ஒரு அணி திருநெல்வேலி மாவட்டத்திலும் மீட்பு மற்றும் நிவாரண பணிக்காக முன்னெச்சரிக்கையாக நிலை நிறுத்தப்பட்டுள்ளனர்.

கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ளதால், மாநில அவசர கால செயல்பாட்டு மையம் மூலம் நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.



## கோவை செம்மொழிப் பூங்காவை டிச.1 முதல் பார்வையிடலாம்

**கோவை, நவ.24–**

கோவையில் ரூ.214 கோடி மதிப்பீட்டில் 45 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள செம்மொழிப் பூங்காவை வரும் 25ம் தேதி முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைக்க உள்ளதாகவும், டிசம்பர் 1ம் தேதி முதல் பூங்காவை பொதுமக்கள் பார்வையிடலாம் என நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

கோவை காந்திபுரம் பகுதியில் ரூ.214 கோடி மதிப்பீட்டில் 45 ஏக்கரில் செம்மொழிப்பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு , முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி ஆகியோர் நேற்று பார்வையிட்டனர்.

இதையடுத்து அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் கூறியதாவது: கோவையில் அமைக்கப்பட்டுள்ள செம்மொழிப்பூங்காவை வரும் 25ம் தேதி காலை 11 மணிக்கு முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்ட பின், டிசம்பர் 1ம் தேதி முதல் செம்மொழிப் பூங்காவை பொதுமக்கள் பார்வையிடலாம். பள்ளிக் குழந்தைகளுடன் முதல்வர் கலந்துரையாட உள்ளார். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளை முதல்வர் பார்வையிட உள்ளார். கோவை நகரின் முக்கியப் பிரமுகர்களுடன் கலந்துரையாட உள்ளார்.

செம்மொழிப் பூங்காவில் மொத்தமுள்ள 45 ஏக்கர் பரப்பளவில் 7 ஏக்கர் மாநாட்டு மையம் போக, மீதமுள்ள பகுதியில் பசுமைப் பூங்கா அமைக்கப்படும். செம்மொழிப்பூங்காவை பராமரிக்கும் பணியை ஒப்பந்தம் எடுக்கும் நிறுவனம் பார்த்துக் கொள்ளும். மாநகராட்சி நிர்வாகம் அதனை மேற்பார்வையிடும்.

கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்ட பின், டிசம்பர் 1ம் தேதி முதல் செம்மொழிப் பூங்காவை பொதுமக்கள் பார்வையிடலாம். செம்மொழிப்பூங்கா பணிகள் தாமதமானால், தாமதம் என்று சொன்னவர்கள், வேகமாய் நடந்தால் அவசரமாய் நடப்பதாக சொல்கின்றனர். தற்போது அவசியம் வந்துவிட்டதால், செம்மொழிப் பூங்காவை திறக்கிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஆய்வின் போது, கோவை எம்.பி. கணபதி ராஜ்குமார், அரசு முதன்மைச் செயலர் (நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை) த.கார்த்திகேயன், நகராட்சி நிர்வாக இயக்குநர் ப.மதுசூதன்ரெட்டி, மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர், மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன், மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதனிடையே தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 'கோவை செம்மொழிப்பூங்கா தொடக்க விழாவைத் தொடர்ந்து நடைபெற உள்ள 'டின்ரைஸ்' நிகழ்ச்சியில், முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில், பல்வேறு தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன' என தெரிவிக்கப்பட்டுள்ளது.




## பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்தக் கோரி அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பேரணி

சென்னை, நவ.24-

பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்தக் கோரி சிபிஎஸ் ஒழிப்பு இயக்கம் சார்பில் சென்னையில் நடைபெற்ற பேரணியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை (சிபிஎஸ்) ரத்துசெய்து, மீண்டும் பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற ஒரே கோரிக்கையை வலியுறுத்தி சிபிஎஸ் ஒழிப்பு இயக்கம் தொடர்ந்து போராடி வருகிறது. இந்நிலையில், இக்கோரிக்கையை நிறைவேற்றக் கோரி, 'கோட்டை நோக்கி பேரணி' நேற்று நடைபெற்றது. எழும்பூர் எல்ஜி கார்டன் சாலை சந்திப்பில் தொடங்கி பேரணி தெற்கு கூவம் சாலை வழியாக ராஜரத்தினம் ஸ்டேடியத்தை சென்றடைந்தது.

சிபிஎஸ் ஒழிப்பு இயக்கத்தின் மாநில தலைமை ஒருங்கிணைப்பாளர் மு.செல்வக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்தப் பேரணியை தமிழ்நாடு அரசு ஊழிய சங்க மாநில தலைவர் எஸ்.ரமேஷ் தொடங்கிவைத்தார். இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கோரிக்கை பதாகைகளுடன் பங்கேற்றனர்.

முன்னதாக, மாநில தலைமை ஒருங்கிணைப்பாளர் பி.பிரெடெரிக் ஏங்கல்ஸ் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஆட்சிக்கு வந்தால் பழைய ஓய்வூதிய திட்டம் நிறைவேற்றப்படும் என திமுக தேர்தல் வாக்குறுதி அளித்தது. ஆனால், பொறுப்புக்கு வந்த நான்கரை ஆண்டுகள் ஆகியும் இன்னும் பழைய ஓய்வூதிய திட்டத்தை திமுக அரசு நிறைவேற்றவில்லை. பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் அமலுக்கு வந்து கடந்த 22 ஆண்டுகளில் 54 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் ஓய்வுபெற்றுள்ளனர். ஆனால் யாருக்கும் ஓய்வூதியம் வழங்கப்படவில்லை.

ராஜஸ்தான் சத்தீஷ்கர், இமாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்கள், அரசு ஊழியர்களுக்கு மீண்டும் பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்திவிட்டது. ஆனால், தமிழக அரசு தொடர்ந்து ஒவ்வொரு குழுக்களாக அமைத்து வருகிறதே தவிர ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்தவில்லை.

காலவரையற்ற போராட்டம்: பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்தினால் சிபிஎஸ் தொகையில் ரூ.54 ஆயிரம் கோடி அரசுக்கு உபரி நிதியாக கிடைக்கும். ஐந்தாண்டு பதவிக்காலம் கொண்ட எம்எல்ஏக்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அதுவும் அவர்களுக்கான ஓய்வூதியம் 300 சதவீதம் அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால், அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் கிடையாது. இது எந்த வகையில் நியாயம்?

தமிழக அரசு எங்கள் கோரிக்கையை நிறைவேற்றாவிட்டால் டிசம்பர் மாதம் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தமும், அதைத் தொடர்ந்து ஜனவரி முதல் கால வரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்திலும் ஈடுபட முடிவு செய்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

## ஐநா பாதுகாப்பு கவுன்சில் சீர்திருத்தம் ஒரு கட்டாய தேவை: பிரதமர் மோடி

ஜொகன்னஸ்பர்க், நவ.24-

ஐநா பாதுகாப்பு கவுன்சில் சீர்திருத்தம் என்பது இப்போது ஒரு கட்டாயத் தேவை என்றும் இதை, இந்தியா பிரேசில் தென் ஆப்ரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து வலியுறுத்த வேண்டும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

தென் ஆப்ரிக்காவின் ஜொகன்னஸ்பர்கில் ஜி 20 உச்சி மாநாடு நடைபெற்று வரும் நிலையில், அதன் இடையே இந்தியா பிரேசில் தென் ஆப்ரிக்கா ஆகிய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற மினிஷிகி கூட்டம் நடைபெற்றது. தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ராமபோசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி, பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா ட சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.



இக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி, "இந்தக் கூட்டம் சரியான நேரத்தில் நடைபெறுகிறது. ஆப்பிரிக்க மண்ணில் நடைபெற்ற முதல் ஜி20 உச்சிமாநாட்டுடன் சேர்ந்து இது நடைபெறுகிறது. வளரும் நாடுகள் (உலகளாவிய தெற்கு நாடுகள்) தொடர்ச்சியாக நான்கு முறை ஜி20 தலைமைத்துவ பொறுப்பை வகித்து வருகின்றன. அதில் கடைசி மூன்று முறை ஐபிஎஸ்ஏ உறுப்பு நாடுகள் ஜி20 தலைமைத்துவத்தை ஏற்று நடத்தி உள்ளன. இதன் விளைவாக, மனிதநேய மேம்பாடு, பலதரப்பு சீர்திருத்தம், நிலையான வளர்ச்சி ஆகியவற்றில் கவனம் செலுத்தும் பல முக்கிய முயற்சிகள் உருவா கியுள்ளன.

ஐபிஎஸ்ஏ என்பது மூன்று நாடுகளின் குழு மட்டுமல்ல. மூன்று கண்டங்கள், மூன்று முக்கிய ஜனநாயக நாடுகள், மூன்று முக்கிய பொருளாதாரங்கள் ஆகியவற்றை இணைக்கும் ஒரு முக்கியமான தளம். உலகளாவிய நிர்வாக நிறுவனங்கள் 21ம் நூற்றாண்டின் யதார்த்த நிலைகளிலிருந்து வெகு தொலைவில் செயல்பட்டு வருகின்றன. உலக நிர்வாக நிறுவனங்களில், குறிப்பாக ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தம் என்பது இப்போது ஒரு கட்டாயத் தேவை என்பதை ஐபிஎஸ்ஏ நாடுகள் இணைந்து வலியுறுத்த வேண்டும்.

பயங்கரவாத எதிர்ப்பில் நெருக்கமான ஒருங்கிணைப்பு அவசியம். பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும்போது இரட்டை நிலைப்பாட்டிற்கு இடமளிக்கக்கூடாது. மனித குலத்தை மையமாகக் கொண்ட வளர்ச்சியை உறுதி செய்வதில் தொழில்நுட்பத்தின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. யுபிஐ போன்ற டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு, கோவின் போன்ற சுகாதார தளங்கள், சைபர் பாதுகாப்பு கட்டமைப்புகள், பெண்கள் தலைமையிலான தொழில்நுட்ப முயற்சிகள் ஆகியவற்றை மூன்று நாடுகளுக்கு இடையே பகிர்ந்து கொள்ளும் வகையில் 'ஐபிஎஸ்ஏ டிஜிட்டல் புதுமை கூட்டமைப்பு' என்ற அமைப்பை நிறுவலாம்.

பாதுகாப்பான, நம்பகமான, மனிதகுல நலனை மையமாகக் கொண்ட செயற்கை நுண்ணறிவு விதிமுறைகளை வகுப்பதில் ஐபிஎஸ்ஏ வலுவான திறனை கொண்டுள்ளது. அடுத்த ஆண்டு இந்தியாவில் நடைபெறும் செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டிற்கு வருமாறு ஐபிஎஸ்ஏ தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்.

ஐபிஎஸ்ஏ அமைப்பில் ஒருவருக்கொருவர் வளர்ச்சிக்கு ஆதரவாக இருந்து நிலையான வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்க முடியும். சிறு தானியங்கள், இயற்கை வேளாண்மை, பேரிடர் மீள்தன்மை, பசுமை எரிசக்தி, பாரம்பரிய மருந்துகள், சுகாதாரப் பாதுகாப்பு போன்ற துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

கல்வி, சுகாதாரம், பெண்களுக்கு அதிகாரமளித்தல், சூரிய மின்சக்தி போன்ற துறைகளில், நாற்பது நாடுகளின் திட்டங்களை ஆதரிப்பதில் ஐபிஎஸ்ஏ நிதியத்தின் பணி பாராட்டுக்குரியது. வளரும் நாடுகளுக்கு (உலகளாவிய தெற்கு நாடுகள்) இடையே ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்தும் வகையில் பருவநிலை மீட்சித் தன்மையுடன் கூடிய வேளாண்மைக்கான ஐபிஎஸ்ஏ நிதியத்தை அமைக்கலாம்" என்று தெரிவித்தார்.

## டிச.10ல் அதிமுக செயற்குழு, பொதுக்குழு கூட்டம்: எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

**சென்னை, நவ.24–**

அதிமுகவின் செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் வரும் டிச. 10ம் தேதி சென்னை வானகரத்தில் நடைபெறும் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், "அதிமுக செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டம், கட்சியின் சட்ட விதிகளின்படி வரும் டிச. 10ம் தேதி காலை 10 மணிக்கு சென்னை வானகரத்தில் உள்ள ஸ்ரீவாரு வெங்கடாசலபதி பேலஸ் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

கட்சியின் அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். கட்சியின் செயற்குழு மற்றும் பொதுக்கழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவருக்கும் தனித் தனியே அழைப்பிதழ் அனுப்பிவைக்கப்படும்.

உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு அனுப்பப்படும் அழைப்பிதழுடன் தவறாமல் வருகை தந்து கழக செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.




## காசி தமிழ் சங்கமம் 4.0 நிகழ்ச்சியை ஒட்டி பனாரஸுக்கு சிறப்பு ரயில்கள் இயக்கம்

**சென்னை, நவ.24–**

காசி தமிழ் சங்கமம் 4.0 நிகழ்ச்சியை ஒட்டி, சென்னை, கோவை, கன்னியாகுமரியில் இருந்து உத்தரபிரசேதம் மாநிலம் பனாரஸுக்கு 7 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளன.

கன்னியாகுமரியில் இருந்து நவ.29ம் தேதி முற்பகல் 11.45 மணிக்கு சிறப்பு ரயில் (06001) புறப்பட்டு, டிச.1ம் தேதி இரவு 11.15 மணிக்கு பனாரஸை சென்றடையும். சென்னை சென்ட்ரலில் இருந்து டிச.2ம் தேதி அதிகாலை 4.15 மணிக்கு சிறப்பு ரயில் (06003) புறப்பட்டு, மறுநாள் இரவு 11.15 மணிக்கு பனாரஸை அடையும்.

சென்னை சென்ட்ரலில் இருந்து டிச.6ம் தேதி அதிகாலை 4.15 மணிக்கு சிறப்பு ரயில் (06007) புறப்பட்டு, மறுநாள் இரவு 11.15 மணிக்கு பனாரஸை அடையும். கோயம்புத்தூரில் இருந்து டிச.3ம் தேதி (புதன்கிழமை) மாலை 6 மணிக்கு சிறப்பு ரயில் (06005) புறப்பட்டு, வெள்ளிக்கிழமை இரவு 11.15 மணிக்கு பனாரஸை சென்றடையும். சிறப்பு ரயில்களுக்கான டிக்கெட் முன்பதிவு தொடங்கி விட்டது.

## கோயம்பேடு சந்தையில் தக்காளி விலை உயர்வு: சில்லறையில் கிலோ ரூ.80க்கு விற்பனை

**சென்னை, நவ.24–**

கோயம்பேடு சந்தையில் தக்காளி விலை உயர்ந்து வருகிறது. நேற்று மொத்த விலையில் கிலோ ரூ.46க்கும், வெளிச்சந்தைகளில் சில்லறை விற்பனையில் ரூ.80 ஆகவும் விற்கப்பட்டது.

கடந்த அக்டோபர் மாதத்தில் கோயம்பேடு சந்தையில் மொத்த விலையில் கிலோ ரூ.15க்கு விற்கப்பட்டது. நவம்பர் மாத தொடக்கத்தில் ரூ.20 ஆக உயர்ந்த தக்காளி, நேற்று கிலோ ரூ.46 ஆக உயர்ந்துள்ளது. சந்தையில் சில்லறை விற்பனையில் கிலோ ரூ.50க்கும், வெளிச்சந்தைகளில் சில்லறை விற்பனையில் கிலோ ரூ.80க்கும் விற்கப்படுகிறது. ஆன்லைனில் ஆர்டர் செய்து, வீடுகளுக்கே வந்து காய்கறிகளை விநியோகிக்கும் நிறுவனங்களில் ரூ.64 முதல் ரூ.86 வரை விற்கப்படுகிறது. கூட்டுறவு பண்ணை பசுமை கடைகளில் கிலோ ரூ.58க்கு விற்கப்பட்டு வருகிறது.

## ஸ்டாலின் மீண்டும் ஆட்சி அமைப்பார்: வைகோ நம்பிக்கை

**சென்னை, நவ.24–**

போதைப்பொருள் ஒழிப்பு, சாதி மோதல் தடுப்பு உள்ளிட்டவற்றை வலியுறுத்தி வரும் ஜன.2 முதல் 12ம்தேதி வரை தான் மேற்கொள்ள் இருக்கும் சமத்துவ நடை பயணத்துக்கு எழும்பூரில் உள்ள மதிமுக அலுவலகத்தில் சென்னை மண்டலத்தைச் சேர்ந்தநிர்வாகிகளை மதிமுக பொதுச்செயலாளர் வைகோ நேற்று தேர்வு செய்தார். அதனை தொடர்ந்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது: புகைப்பிடி ப்பவர்களுக்கு, மது அருந்துபவர்களுக்கு இந்த நடைபயணத்தில் அனுமதி இல்லை. மருத்துவ வசதிகளும் பயணத்தின் போது மருத்துவர்களும் உடன் வருவது போன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. என் எஞ்சிய நாட்களை மக்களுக்காக வாழ விரும்புகிறேன். கஞ்சா போன்ற போதைப் பொருட்களை ஒழிக்க இந்த நடைபயணம் நடைபெறவுள்ளது.



கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் வைத்திருந்தால் குறைந்த பட்சம் 10 ஆண்டு சிறை, பயன்படுத்தினால் 7 ஆண்டு சிறை என்று சட்டத்தை புதிதாக கொண்டு வந்து அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். கல்லூரிகளிலே சாதி சங்கங்கள் வைத்துள்ளார்கள், மோதல் ஏற்படுகிறது, வீச்சரிவாள், பட்டா கத்தியோடு சண்டை போடுகிறார்கள். இதை தடுக்கத்தான் 'சமத்துவ நடைப்பயணம்' எனதலைப்பை வைத்துள்ளேன். ஜன.2ம்தேதி திருச்சி மார்க்கெட் அருகே முதல்வர் மு.க.ஸ்டாலின் நடைபயணத்தை தொடங்கி வைக்கிறார்.

காதர் மொய்தீன், செல்வப் பெருந்தகை, திருமா வளவன் உள்ளிட்டோர் வழி அனுப்ப உள்ளனர். மதுரையில் நடக்கும் நிறைவு நிகழ்வில் கவிஞர் வைரமுத்து, நடிகர் சத்யராஜ், திருமுருகன் காந்தி உள்ளிட்ட முக்கிய நபர்கள், கூட்டணி தலைவர்கள் வாழ்த்துகின்றனர்.

பொதுமக்கள் பெருமளவில் வெள்ளம் போல கூடும்போது அவர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நிகழ்ச்சியை நடத்தும் தலைவருக்குத் தான். பொறுப்பு, பாதுகாப்பு உணர்வோடு தலைவர் தான் இருக்க வேண்டும். பாதிப்பு ஏற்பட்டால் குற்ற உணர்ச்சியோடு இருக்க வேண்டும். இழவு வீட்டுக்கு துக்கம் கேட்டுப் போவதுஎன்றால் அவர்களின் வீட்டுக்குத் தான் செல்ல வேண்டும்;

ஒன்றரை மாதங்களுக்குப் பிறகு அவர்களை நம் வீட்டுக்கு வரவழைத்து கேட்கக் கூடாது. இவையெல்லாம் பொது வாழ்வில் படித்துக் கொள்ள வேண்டிய பாடங்கள்; அரிச்சுவடி. யாரையும் குறை சொல்ல வேண்டும் என்பதற்காக இல்லை. விஜய்தன் கடமையை செய்யத் தவறிவிட்டார். திமுக ஆட்சியில் செயல்படுத்தப்படும் பல்வேறு சிறப்புத் திட்டங் களை அனைத்து மாநில ங்களும் பின்பற்றி வருகின்றன. மக்களுக்கான எண்ணற்ற நலத்திட்டங்களை திமுக செய்துவருகிறது. நிச்சயம் மக்கள் புரிந்துகொள்வார்கள். வருகின்ற சட்டப் பேரவை தேர்தலிலும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மீண்டும் ஆட்சி அமைப் பார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## துபாய் விமான கண்காட்சியில் பலியான தேஜாஸ் போர் விமானி உடல் சூலூர் கொண்டுவரப்பட்டு அஞ்சலி

சூலூர், நவ.24-

துபாய் விமான கண்காட்சியில் பலியான தேஜாஸ் போர் விமானியின் உடல் இன்று கோவை சூலூர் விமானப்படைத்தளம் கொண்டுவரப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. உயரதிகாரிகள் மரியாதை செலுத்தி பின்னர் விமானியின் சொந்த ஊரான இமாச்சல் பிரதேஷ்க்கு அவரது உடல் கொண்டு செல்லப்பட்டது. துபாயில் நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வதேச விமான கண்காட்சியில் சாகச நிகழ்ச்சியின் போது கோவை சூலூர் விமானப்படை தளத்தைச் சேர்ந்த தேஜாஸ் போர் விமானம் திடீரென கட்டுப்பாட்டை இழந்து தரையில் மோதி வெடித்து தீயில் எரிந்தது. இந்த விமானத்தை இயக்கிய இமாச்சல பிரதேசத்தை சேர்ந்த விங் கமாண்டர் நமன்ஸ் சியால் உயிரிழந்தார். இந்நிலையில் விமானியின் மனைவி சூலூர் விமானப் படைத்தளத்தில் விமானப்படை அதிகாரியாக பணியாற்றி வருகிறார். இவர்களுக்கு 6 வயதில் ஒரு குழந்தை உள்ளது. இவர்கள் அனைவரும் குடும்பத்துடன் சூலூர் விமானப்படை தளத்தில் உள்ள விமானப்படை அதிகாரிகள் குடியிருப்பில வசித்து வந்தனர். இந்நிலையில் வீர மரணம் அடைந்த விமானி நமன்ஸ் சியால் உடல் இன்று அதிகாலை 3 மணியளவில் சூலூர் விமானப் படைத்தளத்திற்கு தனி விமானம் மூலம் கொண்டு வரப்பட்டது. பின்னர் அவரது உடல் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பெட்டியில் வைக்கப்பட்டு அவரது உருவப்படம் வைக்கப்பட்டு அதன் முன்பு அவர் அணிந்திருந்த தொப்பி வைக்கப்பட்டது. பின்னர் விமான நமன்ஸஸ் சியால் உடலுக்கு கோவை மாவட்ட கலெக்டர் பவன் குமார், எஸ்பி கார்த்திகேயன் மற்றும் விமானப்படை உயர் அதிகாரிகள் அஞ்சலி மலரஞ்சலி செலுத்தினர். பின்னர் விமானியின் உடல் அதே விமானத்தில் அவரது சொந்த மாநிலமான இமாச்சல பிரதேசம் எடுத்துச் செல்லப்பட்டது. அவரது மனைவியுயும் விமானத்தில் சென்றார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000